மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற நூலகங்களே, முன்னாலே உயர்நிலைப்பள்ளிகளில் இருந்த நூலகங்கள்தான், அவைகளிலே மேற்கொண்டு சில புத்தகங்களை வாங்கி வைத்து, அந்த நூலகங்களைக் கொஞ்சம் அதிகமாக புத்தகங்கள் உடைய வைகளாக ஆக்கியிருக்கிறோம். இந்த நூலகங்களை மாணவர்கள் பயன்படுத்த பகுதி நேர ஊழியர் ஒருவரை நியமித்துப் கொள்ள இப்போது ஆணை வழங்கப்பட்டுள்ளது. அவர் அந்தக் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர் என்றால் மாதம் 25 ரூபாயும் வெளியிலே உள்ள ஒருவராக இருந்தால் மாதம் 50 ரூபாயும் வழங்கலாம் என்ற உத்திரவைத் தந்திருக்கிறோம். இன்றைய நிலையில் இந்தப் பகுதி நேர ஊழியர்களே போதும் என்று அரசு கருதுகிறது.

அண்ணா எழுதிய புத்தகங்கள்

*வினா எண் 165— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : '' அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.''

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னையிலுள்ள ஒரு புத்தக நிறுவனம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களை அதிகமான விலைக்கு விற்பனை செய்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தைத்தடை செய்து, பாரதியார் நூல்களை தேசியமயமாக்கி குறைந்த விலையில் அனைவரும் வாங்கிப் படிக்க வகை செய்திருப்பதைப்போல தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களையும் தேசியமயமாக்கி, ஏழை எளிய மக்களும் அவைகளை வாங்கிப் படிக்கின்ற வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புத்தக நிறுவனத்தார் அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் விற்கிறார்கள். இப்போது இருக்கிற பிரச்சனை மலிவு விலையில் அரசு அண்ணாவின் நூல்களை வெளியிடுமா என்பது. அந்தக் கருத்து தற்போது ஆய்வில் இல்லை என்று சொன்னேன். மற்றப்படி புத்தக நிறுவனத்தாரின் உரிமையைத் தடைசெய்து, அந்த உரிமையை அரசாங்கம் பெறுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை.

1981 பிப்ரவரி 6]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மலிவு விலையில் அண்ணாவின் புத்தகங்களை வெளியிடுவதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏழை எளிய மக்களும் பேரறிஞர் அண்ணாவின் புத்தகங்களைப் படிப்பதற்கு வேறு ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கல்வித் துறையைப் பொறுத்த வரையில் இத்தகைய கருத்து ஆய்வில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். மற்றபடி பேரறிஞர் அண்ணாவின் நூல்களை வெளியிடுகின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் அதை நல்ல முறையில் வெளியிட அரசினுடைய ஆதரவு தேவை என்று கருதி வந்தால், அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள், நாவல்கள், விளக்க நூல்களை பள்ளிகளிலே படிக்கின்றவர்கள் மனதிலே பசுமரத்து ஆணிபோல பதிய வைக்க பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் துணைப்பாடங்களாக வைக்க உத்தேசம் உண்டா? பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள், நாவல்கள் பல திரைப்படங்களாக வந்திருக்கின்றன. மீதமுள்ளவைகளையும் திரைப்படங்களாக வெளியிட அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பாடப்புத்தகங்களை நிர்ணயிக்க குழுக்கள் இருக்கின்றன. குறிப்பாக கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழக பாடக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அண்ணாவின் நூல்களைப் பரிசீலிப்பதில் அரசு மிக்க மகிழ்ச்சியடையும். அத்தகைய ஒரு நிலையில் அந்தப் பாடக் குழுக்கள் பேரறிஞர் அண்ணாவின் நூல்களை நல்ல முறையில் பரிசீலித்து கல்லூரி மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாடப்புத்தகங்களாக வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் விற்க இயலாவிட்டாலும் அந்தப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது அந்த உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 6

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்கள் சமயம், சட்டம், சமூகம் ஆகிய அத்தனையையும் உள்ளடக்கியதாக இருப்பதால், அப் புத்தகங்களைப் படிக்கின்றவர்கள் தமிழகத்தின் எல்லா கலைச் செல்வங்களையும் அரசியல், சமுதாய அமைப்புக்களையும் தெரிந்து கொள்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் அந்தப் புத்தகங்களின் மூலம் இவை அத்தனையையும் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கின்றது. ஆகவே, அந்தப் புத்தகங்களை மலிவு விலையில் கிடைக்கச் செய்வது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்களைப் படித்து அவருடைய பல்லாயிரக் கணக்கான கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில்தான் 1967-ஆம் ஆண்டிலே இருந்து தமிழகத்தில் அவருடைய பெயராலே அரசு நடந்து கொண்டிருக்கின்றது. மேலும் அவருடைய நூல்களை வெளியிடுகின்ற பொறுப்பை இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் கூட ஏற்றுக் கொண்டு செய்ய முடியும். ஆனால் அரசே அதைச் செய்ய வேண்டுமென்றால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சிவகிரியில் நூலகத்திற்கான இடம்.

*வினா எண் 166—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் நூலகம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.